MC.NO. 11/2023 Page No.
DATE: 05.02.2025
P.W.1 – SUDHA, W/O.VISWANATHAN

**சாட்சி மனுவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணை:**

எனக்கும் எனது கணவருக்கும் இந்து மத முறைப்படி திருமணம் நடைபெற்றது என்றால் சரிதான். 12.02.2001 அன்று எங்கள் இருவருக்கும் திருமணம் நடைபெற்றது. திருமணத்தின் போது நான் சீர்வரிசையாக எதுவும் கொண்டுவரவில்லை என்றால் சரியல்ல. திருமணம் நடைபெற்று உடனே சாந்திமுகூர்த்தம் நடைபெற்றதா என்றால் இல்லை ஒரு வாரம் கழித்து நடைபெற்றது. அந்த ஒரு வாரம் நான் எங்கிருந்தேன் என்றால் எனது மாமியார் வீட்டில் இருந்தேன். திருமணமான நாளிலிருந்தே எனக்கு திருமணத்தில் விருப்பம் இல்லை என்று எனது கணவரிடம் சொல்லிவந்தேன் என்றால் சரியல்ல. எனது மாமியார் சாந்தி முகூர்த்தம் தள்ளி போனது குறித்து எந்த கேள்வியும் கேட்கவில்லையா என்றால் ஆமாம். திருமணத்திற்கு முன்பு நான் என்ன படித்திருந்தேன் என்றால் 10ஆம் வகுப்பு தேர்ச்சி பெறாமல் இருந்தேன். திருமணத்திற்கு முன்பு ஏற்றுமதி நிறுவனத்தில் வேலைக்கு சென்று கொண்டிருந்தேன். திருமணத்திற்கு பின்னிட்டு எந்த வேலைக்கும் செல்லவில்லை.

திருமணத்தின்போது எனது கணவர் ராணுவத்தில் பணியாற்றி கொண்டிருந்தார். திருமணத்தின்போது அவர் ராணுவத்தில் பணிபுரிந்த விவரம் தெரிந்து தான் திருமணம் செய்துகொண்டேன் என்றால் சரிதான். எனது கணவர் திருமணமான நாளிலிருந்து ஜம்முவில் வேலை செய்து கொண்டிருந்தார். திருமணத்திற்கு பின்பு 5 மாதம் கழித்து நானும் ஜம்முவிற்கு சென்றுவிட்டேன். திருமணமான முதல் மாதத்திலேயே நான் கருவுற்றேன். நான் ஜம்முவிற்கு சென்றபோது கருவுற்றிருந்தேன் என்றால் சரிதான். திருமணம் நடைபெற்று ஒரு மாதம் கழித்து எனது கணவர் ஜம்முவிற்கு சென்றுவிட்டார். திருமணம் நடைபெற்ற முதல் மாதம் எங்களுக்குள் உறவுமுறை சுமூகமாக இருந்தது. நான் ஜம்முவில் இரண்டு மாதங்கள் மட்டுமே எனது கணவரின் ராணுவ குடியிருப்பில் இருந்தேன். எனது முதலாவது குழந்தை துர்காதேவி 25.11.2001 ஆம் தேதி பிறந்தார். மேற்படி எனது முதல் குழந்தையின் பள்ளி படிப்பு மற்றும் காலேஜ் படிப்பை எனது கணவர் தான் பார்த்துக்கொண்டார் என்றால் சரிதான். எனது மகள் எம்டெக் படிக்கும் போது கடைசி வருட கல்லூரி கட்டணத்தை எதிர்மனுதாரர் செலுத்தவில்லை. எனது மகளின் கல்லூரி செலவுக்காக எதிர்மனுதாரர் எவ்வளவு செலவு செய்திருப்பார் என்றால் தோராயமாக 8 லட்சம் செலவு செய்திருப்பார். பள்ளி கட்டணமாக தோராயமாக 2 லட்சம் செலவு செய்திருப்பார்.

தற்போது எனது கணவர் ஐவிபிஎம்–ல் பணிபுரிந்து வருகிறார். நாங்கள் இருவரும் இரண்டு வருடங்களாக பிரிந்து வாழ்கிறோம். தற்போது என்னுடைய வயது 44. இரண்டு வருடங்களாக நான் எனது பெற்றோர் வீட்டில் வசித்து வருகிறேன். எனக்கு குமார் என்ற நபரை தெரியுமா என்றால் தெரியும் அவர் எனது கணவரின் நண்பர். எதனால் தற்போது கணவரை பிரிந்து வாழ்கிறேன் என்றால் எனக்கும் மேற்படி குமார் என்பவருக்கும் தொடர்பு இருப்பதாகவும் அதனை ஒத்துக்கொள்ளும்படியும் எனது கணவர் வற்புறுத்தியதால் பிரிந்து வாழ்கிறோம். நானும் குமார் என்பவரும் பழக்கத்தில் தான் இருந்து வருகிறோம் என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர் 3 வருடங்களுக்கு முன்பு கொரானாவால் பாதிக்கப்பட்டு சிஎம்சி மருத்துவமனையில் ஒரு வாரம் சிகிச்சையில் இருந்தார். எனது கணவரை மருத்துவமனையிலிருந்து வீட்டுக்கு அழைந்து வந்தபோது

யார் எனது வீட்டில் இருந்தார்கள் என்றால் எனது மகள் மட்டும் இருந்தார். சிகிச்சையிலிருந்த எனது கணவரை குமார் வந்து பார்த்தாரா என்றால் சிகிச்சை முடிந்து வீட்டுக்கு வந்தபின்பு குமாரும் அவரது மனைவியும் வந்து பார்த்தார்கள். எந்த காரணத்திற்காக எனக்கும் குமாருக்கும் தொடர்பு இருப்பதாக எனது கணவர் கூறுகிறார் என்றால் அதை அவரிடம் தான் கேட்க வேண்டும்.

எனது பெயரில் சொந்தவீடு உள்ளதா என்றால் உள்ளது. அந்த வீடு 1500 சதுர அடியில் உள்ளது. அந்த வீட்டின் ஒரு பகுதியை வாடகைக்கு விட்டுள்ளோம் என்றால் சரிதான். அது எனது கணவரின் சொந்த உழைப்பில் கட்டப்பட்டது என்றால் இருவரும் கஷ்டப்பட்டு தான் கட்டினோம். அந்த வீடு கட்டுவதற்கான வாங்கிய கடனை எதிர்மனுதாரர் தான் வங்கியில் கட்டி வருகிறார் என்றால் சரிதான். அந்த வீட்டின் தற்போதைய மதிப்பு 70 லட்சம். அந்த வீட்டிலுள்ள அனைத்து பொருட்களும் எனது கணவரின் உழைப்பில் வாங்கப்பட்டது என்றால் சரிதான். அந்த வீட்டில் தூய்மைபடுத்துவது, சமைப்பது என அனைத்து வேலைகளையும் நான் தான் செய்தேன் என்றால் சரிதான்.

இந்த உத்தரவு என்னால் தட்டசருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் உடனுக்குடன் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைகள் திருத்தம் செய்யப்பட்டு இன்று 05.02.2025 ஆம் தேதி பகரப்பட்டது.

ஓம்.ஜோ.ஜெய்கணேஷ்,
குற்றவியல் நீதித்துறை நடுவர்,
காட்பாடி.